பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்

பம்பையே வாங்குங்கள்

# உதயன்


விலை ரூபா 3·50

When only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர் 5: பிரமோதூத ஆனி 19 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்ஜா பிறை 09 (03 · 07 · 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAM'L DAILY கதிர் 130



கடந்த வெள்ளியன்று யாழ். நகரில் போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களில் சேதமுற்ற வீடுகளில் சில.

# கோட்டையைக் கைவிட்டால் புலிகளுடன் பேச அரசு தயார்!

## ஆனால் போர் நிறுத்தத்துக்கு இடமில்லை; அமைச்சர் ரஞ்சன் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

யாழ்ப்பாணம் கோட்டை முகாமை விடுதலைப் புலிகள் விட்டுத் தந்தால், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது.

ஆனால் அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்காதவரை யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுத் தெரிவித்தார்.

திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்று விசேட பத்திரிகையாளர் மாநாடுஒன்றை நடத்தினார்.

அப்போது அவர் சொன்னதாவது:-

யாழ்ப்பாணம் கோட்டை முகாமை விடுதலைப் புலிகள் கைவிட்டால் அவர்களுடன் பேச்சுக்களை நடத்த அரசு தயாரக உள்ளது.

ஆனால் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று மிகத் தெளிவாக அரசு அறிவித்து உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களைக் கீழே வைக்காதவரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனால் விடுதலைப்புலிகள் விரும்பினால் அவர்களுடன் அரசுதரப்பில் விவாதிக்க முடியும்.

விவாதமும் போரும் ஒரே சமயத்தில் நடப்பது சாத்தியம்தானே!

யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இலங்கை அரசு இணங்காது.

சார்க் அமைப்பு நாடுகள் வற்புறுத்தினாலும் சரி,குறிப்பாக இந்தியா வற்புறுத்தினாலும் சரி, யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இலங்கை அரசு இணங்காது.

வடக்கு - கிழக்கு யுத்தம் இறுதி முடிவு வரும் வரை நடந்தே தீரும்.

இலங்கைத் தீவில் தீவிரவாதத்துக்கு ஒரு முடிவு கட்டிவிட்டு ஜனநாயகத்தை ஏற்படுத்துவது தான் இலங்கை அரசின் குறிக்கோளாகும் என்றார் அவர். (அ-எ)

### சுப நேரம்

03-7-90

செவ்வாய்க்கிழமை ஆனி 19

சுபநேரம்!

10-27—11-57

இராகுகாலம்

02-57—04-27

## தமிழருக்குத் தடை! வவுனியா நகருக்குள் செல்ல

யாழ்ப்பாணம், ஜூலை 3

வவுனியா நகர்ப்பகுதிக்குச் செல்லும் யாழ்ப்பாண வீதி, மன்னார் வீதி ஆகிய இரண்டும் மூடப்பட்டுள்ளன. இந்த இரு வீதிகளாலும் தமிழர்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நகருக்குச்செல்ல உள்ளஇந்த இரு பாதைகளிலும் காவல் அரண் (சென்றி) அமைத்துள்ள இராணுவத்தினர் உள்ளே எவரையும் அனும

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் மோதலில் ஆறு புலிகள் வீரமரணம்

### 30 படையினரும் உயிரிழப்பு?

யாழ்ப்பாணம், ஜூலை 3

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஆறு பேர் வீரமரணமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் 30 இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

காலை 6.30 மணி முதல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு ஏன்? ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 3

நாடாளுமன்றைப் பகிஷ்கரிக்க முடிவு செய்யப்பட்டது ஏன் என்பதை விளக்கி ஈரோஸின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே பாலகுமாரன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

''மீண்டும் இன அழிப்பில் ஸ்ரீலங்கா அரசு'' என்ற தலைப்பில் இந்த அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

ஈழத் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளப்பட்டது ஏன் என்று குறித்தும் ஈழத் தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போர் முன்னர் நடைபெற்ற முறை குறித்தும் இந்த அறிக்கையில் விளக்கப்பட்டிருந்தது.

தற்போது ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் இனப்படுகொலை மற்றும் இராணுவ நடவடிக்கைகளினால் ஈழத் தமிழர் இன்னல்கள் அனுபவிப்பதாகவும் அந்த இன்னல்கள் பற்றியும் அறிக்கையில் விளக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இதுவரை காலமும் இன ஒடுக்கலுக்குச் சட்டம் இயற்றும் கருவியாக விளங்கி வந்த சிறிலங்கா நாடாளுமன்றத்தில் கடந்த ஒரு வருட காலமாக அங்கத்துவம் வகித்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## 7 பேர் பற்றி தகவல் இல்லை இராணுவத்தினர் கைவிரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

கடந்த 21ஆம் திகதி வவுனியா நகரப் பகுதியில் கைதான 7பேர் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

தமது வீடு, கடைகளைப் பார்ப்பதற்காக ஏழு தமிழர்கள் அன்றையதினம் வவுனியா நகரப்பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இவர்களை இராணுவத்தினர் கைதுசெய்திருந்தனர் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அவர்களைத் தாம் கைதுசெய்யவில்லை என்று இராணுவத்தினர் கைவிரிக்கின்றனராம். (இ-3)

## காங்கேசன் முகாம் புலிகளிடம் வீழ்ந்தது!

கொழும்பு ஜூலை 3

காங்கேசன்துறை சிமெந்து ஆலை இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இத்தகவலை பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்றுக் கொழும்பில் வெளியிட்டார். [உ-எ]

## மாங்குளத்தில் படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 3

கடந்த சனிக்கிழமை மாங்குளம் இராணுவ முகாமில் ஹெலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினாலும், தவறுதலாக வெடித்த குண்டு ஒன்றினாலும் பல இராணுவத்தினர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அன்றைய தினம் ஹெலிகொப்டர் ஒன்று மாங்குளம் இராணுவ முகாமிற்கு உணவுப் பொதிகளைப் போட முற்பட்டது. அப்போது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து முகாமிலிருந்து இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 19 படையினர் கால்களை இழந்தனர்

மன்னார் முள்ளிக்குளத்தில் விடுதலைப்புலிகளின் பொறிவெடியில் சிக்கி 19 படையினர் கால்களை இழந்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் கிடைக்கும்

வடமராட்சி மற்றும் பளை, பரந்தன், பூநகரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் உதயன் இப்போது தாராளமாக விற்பனையாகிறது என்பதனை அப்பகுதி வாசகர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம்.

எரிபொருள் இல்லாமை காரணமாக மேற்கண்ட இடங்களுக்கான விநியோகம் தடைப்படுமோ என்று நாம் அஞ்சிய போதிலும், உரிய நேரத்தில் அந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட்டது.

உதயன் தமக்குக் கிடைக்காமற் போகுமோ என்று ஏங்கிய வாசகர்களுக்கு, அவர்கள் காட்டிய அபிமானத்துக்காக நன்றி செலுத்துகிறோம்.

—நிர்வாகத்தினர்.

# யாழ். நகரில் நேற்றும் பொம்மர் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாண நகரப் பகுதியில் — கோட்டையைச் சூழவுள்ள பிரதேசத்தில் — நேற்றும் நாள் முழுவதும் போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை குண்டு வீச்சு விமானங்கள் மாறி மாறி வந்து நகரப்பகுதியில் குண்டுகளைப் பொழிந்து தள்ளின.

அனேகமான குண்டுகள் யாழ் கோட்டையைச் சூழவுள்ள பிரதேசத்தில்—வீரசிங்கம் மண்டபம்,பொதுநூலகக் கட்டடம், பழைய பொலீஸ் நிலையக் கட்டடம் ஆகியவற்றை அண்டிய பகுதிகளிலும், மண்டைதீவுப் பகுதியிலும் — விழுந்து வெடித்து பாரிய குழிகளை ஏற்படுத்தி இருந்தன.

நேற்றைய குண்டு வீச்சில் ஹோட்டல் அசோக்கும் பெரும் சேதமுற்றது. அருகில் இருந்த றிம்மர் மண்டபக் கட்டடமும் சேதமடைந்தது.

விமானங்களில் இருந்து பீப்பாய்க் குண்டுகளும் உருட்டி விடப்பட்டன. அவை பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன. அதனால் யாழ் நகரப் பகுதி அடிக்கடி அதிர்ந்தது.

போர் விமானங்கள் குண்டுகளை வீசிய அதே சமயம் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் அடிக்கடி கோட்டைப் பகுதிக்கு வந்து தாழப்பறந்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகே 5 வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை3

நேற்றுக்காலை யாழ். நகரில் போர்விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகே கஸ்தூரியார் வீதிப் பகுதியில் இருந்த ஐந்து வீடுகள் சேதமுற்றன.

இந்த வீடுகளில் இருந்தவர்கள் போர்விமானங்களின் சத்தம் கேட்டதும் பதுங்குகுழிக்குள் தஞ்சம் புகுந்திருந்ததனால்உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

யாழ். இந்துமகளிர் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் அது இயங்கிய பாடசாலைக் கட்டடமும் நேற்றைய குண்டு வீச்சுத் தாக்குதலில் தரைமட்டமானது.

இந்தக் கட்டடத்தில்தான் 1943ஆம் ஆண்டு யாழ் இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப கால வகுப்புக்கள் இடம்பெற்றன.

கல்லூரி புதிய இடத்துக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா அரச ஊழியருக்கு வேண்டுகோள்

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க, வங்கி ஊழியர்கள் அனைவரையும் எதிர் வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 10மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவில்முன்றலில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தவிர்ந்த அனைவரையும் சமுகமளிக்குமாறு வவுனியா அரச அதிபர் திரு.செ.பத்மநாதன் கேட்டு உள்ளார்.

### முச்சந்தி முரளி



கோட்டையைப் பிடித்தால் யுத்தத்தை வெண்டதுக்குச் சரி என்ற போர்ச் சூத்திரம் உவருக்கும் தெரியுது போலை.........!

# ஈழப் பிரச்சினையில் இந்தியா தலையிடாதுஎன உறுதிமொழி

## குஜ்ரால் நேற்று திலகரத்னாவிடம் தெரிவிப்பு

லண்டன், ஜூலை 3

★ இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் சண்டை தொடர்பாக இந்தியா எந்தவித தலையீடும் செய்யாது.

★ ஈழப்போராளிகள் குழுக்கள் இந்தியாவில் தமிழகத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலோ தளம் அமைத்துச் செயற்பட இந்தியா அனுமதிக்காது.

— இந்த இரண்டு உறுதி மொழிகளையும் இந்தியா வழங்கியிருப்பதாக பி.பி.ஸி. நேற்றிரவு அறிவித்தது.

புதுடில்லி சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரத்னாவிடம், இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பதாகவும் பி.பி.ஸி தெரிவித்தது.

ஆனால் —

இந்தப் பிரச்சினையில்வேறு எந்த நாடும் தலையிடக்கூடாது; தலையிடமாட்டாது என்ற உறுதிமொழியை இலங்கைத் தரப்பு வழங்கியதை அடுத்தே இந்தியா தனதுதரப்பு உறுதிமொழியை வழங்கியதாகக் கூறப்படுகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (சின்னஞ்சிறு விளம்பரம்)

### தவறிவிட்டது

394 மத்திய வீதி திருக்கோணமலையைச் சேர்ந்த கந்தையா மகேந்திரன் என்பவரின் அடையாள அட்டையும் வாகன சாரதி அனுமதிப்பத்திரமும் 29-06 90 அன்று உடுப்பிட்டியில் வைத்து காணாமல் போய்விட்டது. எடுத்தவர்கள் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கும்படிகேட்டுக்கொள்கின்றோம். (13558)

30-05-90 இல் கிளிநொச்சியில் இருந்து யாழ். வரும்போது பேர்ஸ் உடன் அடையாள அட்டை தவறிவிட்டது. மணிசுந்தரம் முரளிதரன் 661901225V கிரிப்பல வீதி, சரவெட்டி மேற்கு, சரவெட்டி என்ற முகவரிக்கு அனுப்பவும், அல்லது உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி/4785)

## கும்பாபிஷேகம்

சுழிபுரம், ஜூலை 03 வடலியடைப்பு துந்நுவப்புலம் அருள்மிகு பாதாள வயிரவ சுவாமி புனராவர்த்த சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் 4 ஆம் திகதி புதன் கிழமை கலை ஒன்பது மணி முதல் நடைபெறும். (இ-28)



கடந்த வெள்ளியன்று யாழ் நகரில் போர் விமானங்கள் குண்டுகளை வீசிய போது சேதமுற்ற இலங்கை தேசிய சேமிப்பு வங்கி யாழ் கிளையின் மேல் [illegible]டியின் தோற்றம். (உ)

## அம்புலன்ஸ்மீது சூடு

ஓமந்தையில் காயமடைந்த சிலரை அம்புலன்ஸில் ஏற்றிச் சென்றபோது அந்த அம்புலன்ஸ் மீது ஹெலியில்இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

சாரதி அம்புலன்ஸின் மேற்பகுதியில் உள்ள ''சமிக்ஞை''யைக் காட்டியும் ஹெலியில் இருந்து தொடர்ந்துவேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

சாரதி சாதுரியமாக ஒரு மரத்தின்கீழ் வாகனத்தை நிறுத்திவிட்டு, ஓடி மறைந்து தப்பிக்கொண்டார். [ஓ-9]

## காத்தான்குடி: 70 கடைகள் கொள்ளை

கொழும்பு, ஜூலை 3 கடந்த சில நாட்களில் ஏற்பட்ட வன்முறையின் போது காத்தான் குடியில் சுமார் 70 கடைகள் கொள்ளையிடப்பட்டன. மூன்று கடைகள் எரிக்கப்பட்டன.

## விடுதிகளுக்கு மூடு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 3 கொழும்பில் தமிழர்கள் தங்கும் விடுதிகள்(லொட்ஜுகள்) பலவும் மூடப்பட்டுவிட்டன.

சோட்டை, வெள்ளவத்தை பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் பலவிடுதிகள் இயங்கி வந்தன.

பிரஸ்தாப விடுதிகளில் வடக்கு-கிழக்கில் இருந்து செல்லும் தமிழ்ப்பயணிகளும் கொழும்பில் பணிபுரியும் தமிழர்களுமே தங்கி வந்தனர்.

''இனிமேல் விடுதிகளைத் திறந்தால் 'சீல்' செய்வோம்'' என்று படையினர் விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்தே பல விடுதிகள் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-3)

### யாழ் இந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றப்பட்டதை அடுத்து அக்கட்டடத்தில் திரு.பொன்னுச்சாமி இராமச்சந்திரன் தமது குடும்பத்தவருடன் வசித்துவந்தார்.

அந்தக் கட்டடமும், அதற்குப் பக்கத்தில் இருந்த இரண்டு வீடுகள், மற்றும் ஒரு கராஜ், நீராவிபடி ஒழுங்கையில் இரண்டு வீடுகள் ஆகியனவும் நேற்றைய தாக்குதலில் சேதமுற்றன. (உ-10)

### கொழும்பிலிருந்து

## 650 பேர் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 3 கொழும்பில் கடந்த சில தினங்களாக சிக்கி இருந்த யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த சுமார் 650 பேர் ஞாயிறன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

சனிக்கிழமை காலை 6.00 மணி அளவில்கொழும்பு வெள்ளவத்தை பிள்ளையார் கோவிலில் இருந்து 18 வாகனங்களில் இவர்கள் புறப்பட்டனர்.

இந்த 18 வாகனங்களில் ஒரு பெரிய பஸ், நான்கு மினி பஸ்கள் தவிர ஏனையவை லொறிகள்.

இந்த வாகனத் தொடருக்குப் பாதுகாப்பாக இராணுவத்தினர் ஒரு டிரக்கிலும் பொலீஸார் இன்னொரு டிரக்கிலும் வந்தனர். இதனைத் தவிர கல்வி துணை அமைச்சர் திருமதி ஆர். எம். புலேந்திரன் ஒரு காரில் வந்தார். துணை அமைச்சரின் மெய் பாதுகாவலர்கள் ஒரு பிக்கப் வாகனத்தில் வந்தனர். துணை அமைச்சின் காருடன் மற்றும் ஒரு காரும் அதிகாரிகள் சகிதம் வந்தது.

இந்த பாதுகாப்புகள் மதவாச்சி முகாம் வரையிலேயே வழங்கப்பட்டன. திருமதி புலேந்திரனும் மதவாச்சியுடன் திரும்பிச் சென்றுவிட்டார்.

இந்த வாகனங்கள் செட்டிகுளம், மடு, சங்குப்பிட்டி வழியூடாக ஞாயிறு நண்பகல் அளவில் யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தியை வந்தடைந்தன. (இ-10)

### யாழ்நகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றன.

போர் விமானங்களில் இருந்து குண்டுவீச்சுக்கு மத்தியில் உணவுப் பொதிகளும் போடப்பட்டன அவை கோட்டைமுகாமுக்குள் விழுந்தனவா என்பதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (உ-10)

### தமிழருக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி

திக்க மறுக்கின்றனர். வாகனங்களையும் செல்ல அனுமதிக்கிறார்களில்லை.

அதே நேரம் மறுபகுதியில் மதவாச்சிப்பாதையூடாக தமிழர்களுக்கு அனுமதி இல்லையானாலும் சிங்களவர்கள் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

அத்துடன் பெற்றோல், டீசல் அங்குள்ள எரிபொருள் நிலையங்களில் இருந்த போதும் அவற்றை எடுக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (அ-3)

### தாண்டிக்குளம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை4 30மணிவரை நீடித்த இந்த மோதலில் இராணுவத்தினரின் வாகனங்கள் பல சேதமாக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் செந்தில், லெப்டினன்ட் அசோக், நித்திலன், மௌலீசன், கணேசலிங்கம், இன்பம் ஆகியோர் வீரமரணமடைந்தனர். (உ-9)

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

பரந்தன் மூன்றாம் வாய்க்கால் பன்னைக்கன்டிப் பிள்ளையார் கோவிலில் 04-07-90இல் நடைபெற இருந்த புனராவர்தன மகா கும்பாபிஷேகம் தவிர்க்க இயலாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. என்பதை அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்,
பரிபாலன சபையினர்.

[13559]

## மாவுக்கு பெரும் தட்டுப்பாடு; கூட்டு. கடைகளிலும் முடிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 3 யாழ். மாவட்டத்தில் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கடைகளில் கையிருப்பில் இருந்த மாவும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு கையிருப்பு முடிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து பாணுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மா கையிருப்பில் வைத்துள்ள சில பேக்கரிக்காரர்கள் மட்டும் பாண் தயாரித்து வருகின்றனர். (ஒ-10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**மாணிக்கம் சுப்பிரமணியம்**
(கிளாக்கர்)

மண்ணில்: 26- 10 - 1910 விண்ணில்: 03 - 06 - 1990

எங்கள் அருமை ஐயாவே! எங்களையெல்லாம் அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து நல்வழி காட்டினீர்களே இன்று நீங்கள் எங்களை விட்டு பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் உங்கள் அன்பு வதனம் எங்கள் கண் முன் நிழலாடுகிறதே.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சி 03-07-90 செவ்வாய்க்கிழமை பகல் பன்னிரண்டு (12 மணி) மணியளவில் அவரத் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இறுதிக்கிரியைகளின் போது வருகை தந்தவர்களுக்கும், தபால், தந்திமூலம் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம் தங்கள் பிரிவால் துயருறும்:
-குடும்பத்தினர்

கந்தரோடை,
சுன்னாகம். (சி/4784)

## மீண்டும் பேச்சு நடத்தியே தீர்வு காண விரும்புகிறேன்

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 3 மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நான் விரும்புகின்றேன்.

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த சனிக்கிழமை நுவரெலியாவில் நடந்த அரசு அதிகாரிகள் மாநாடு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று வடக்கு - கிழக்கில் ஆயுதம் ஏந்தி யுத்தம் நடைபெறுகின்றது.

இந்த யுத்தத்தினால் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நான் நினைக்கவில்லை.

பேச்சுக்களை மீண்டும் நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே நான் விரும்புகின்றேன்.

எனது அரசாங்கம் வெறும் ஆயுத பலத்தில் தங்கியிருக்கவில்லை; மக்களின் ஆதரவில் தான் தங்கியுள்ளது.

நாட்டில் வடக்கிலும் கிழக்கிலும் பிரச்சினைகளை உருவாக்கும் அதே தீய சக்திகள் தெற்கில் நிலவும் சமாதான சூழ்நிலையைக் குழப்பவும் முற்படுகின்றன.

மக்கள் விழிப்பாக இருந்து இச்சக்திகளின் பொறிகளுக்கு பலியாகாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்

### தோட்டப் பகுதிகளில்

இத்தீய சக்திகள் தோட்டப் பகுதிகளிலும் பிரச்சினைகளை உருவாக்க முற்படுகின்றார்கள்.

இவர்கள் தங்கள் நோக்கத்தில் வெற்றி கண்டால் தோட்டங்களில் வாழ்ந்து உழைத்து வரும் மக்கள் அனாவசியமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கும்

நாம் வெவ்வேறு சமூகத்தினராக இருந்தாலும் அனைவரும் மனித இனத்தைச் சேர்ந்தவர்களே.

மொழிப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டு உள்ளது. தோட்டத் தொழிலாளருக்கு பிரசா உரிமை வழங்குவதற்கான சட்ட ஆக்கம் கொண்டு வரப்பட்டு உள்ளது.

### தாமதம் ஏற்படும்

எனவே நாட்டில் நிலைமை உறுதியற்றதாக இருக்குமானால், இந்தியாவுடனான உடன்பாட்டில் கைச்சாத்திட்டதனால் எழுந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது நிச்சயமாக தாமதமேற்படும்.

ஜனாதிபதி பிரேமதாஸா மேலும் சொன்னதாவது:

அமைதியை ஏற்படுத்த இலங்கை வந்த இந்திய அமைதிப்படை பின்னர் மோதலில் ஈடுபட்டது.

இந்தியப் பத்திரிகைகளின் நெருக்குதலாலும் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாகவுமே இந்தியா அமைதிப் படையை விலக்கிக் கொண்டது.

தற்போதைய நெருக்கடி[illegible] நாமே தீர்த்துக் [illegible] முடியும். — இவ்[illegible] அவர் சொன்னார். (அ-எ)

### சாம்பியாவில்

## இராணுவ தளபதி பதவி நீக்கம்

லுஸாக்கா, ஜூலை 3 சாம்பியாவின் இராணுவத் தளபதி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

விமானப் படைத் தளபதியை புதிய பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி கென்னத் கவுண்டா நேற்று நியமித்தார்.

கடந்த சனிக்கிழமை தோல்வியில் முடிந்த சதி முயற்சியைத் தொடர்ந்து திரு. கவுண்டா இந்த நடவடிக்கையை எடுத்தார்.

சதி முயற்சியின் பின்னால் மூன்று இராணுவ உயர் அதிகாரிகள் இருந்தனர் என்று கூறப்படுகிறது.

சதி முயற்சி பற்றி வானொலியில் அறிவித்த லெப்டினன்ட் ஜெனரல் தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ஏற்கனவே கைதாகி பலத்த காவலில் வைக்கப்பட்டார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட இராணுவத் தளபதியின் பெயர் லெப்டினன்ட் காரிகலங்கே ஆகும்.

புதிய தளபதியாக திரு. கவுண்டாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான லெப்டினன்ட் பிரான்ஸிஸ் மிடா பான்ட் நியமிக்கப்பட்டார். (இ-எ)

### ஈ. என். டி. எல். எப் மறுக்கிறது

சென்னை, ஜூலை 03 சென்னை மத்திய சிறையில் அதிகாரிகளுடன் தமிழ்ப் போராளிகள் மோதியதாக வெளிவந்த செய்தியை மறுத்து ஈ. என். டி. எல். எப் இயக்கம் சென்னையில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (ஒ-எ)

### சீனாவில் சனத்தொகை கணக்கெடுப்பு

பீகிங், ஜூலை 3 சீனாவில் சனத்தொகை கணக்கெடுப்பு பணி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. பத்துத் தினங்கள் வரை இது நீடிக்கும்.

70 ஆயிரத்துக்கு அதிகமான ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடைசியாக சீனாவில் சனத்தொகை கணக்கெடுக்கும் பணி 1982 இல் இடம்பெற்றது. 103 கோடி ம[illegible] வில் அப்போது வ[illegible] தனர் என்று தெ[illegible] (இ-எ)

### ஹெக்டே இராஜினாமா

புதுடில்லி, ஜூலை 3 இந்தியாவின் திட்டக் கமிஷனின் பிரதித் தலைவர் பதவியில் இருந்து திரு. ராமகிருஷ்ணா ஹெக்டே இராஜினாமாச் செய்தார்.

தனது பதவி விலகல் கடிதத்தை திரு. ஹெக்டே பிரதமர் வி பி.சிங்குக்கு அனுப்பி வைத்தார்.

கர்நாடக மாநில முதலமைச்சராக இருந்த திரு. ராம[illegible] நாடக சட்டசபை உறுப்பின[illegible] வருகிறார். (இ-எ)

## அரசாங்க அறிவித்தல்

ஊர்காவற்றுறை சுகாதாரப் பணிமனையைச்சேர்ந்த சகல உத்தியோகஸ்தர் அனைவரும் எதிர்வரும் புதன் கிழமை [04-07-1990] காலை 8 00 மணிக்கு தற்போது இயங்கும் யாழ்ப்பாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு தவறாது சமுகம் அளிக்கவும்.

தற்போதைய பணிமனை விலாசம்:

**திரு. சி. ஞானசுந்தரம்,**
முத்தடி மடம் ஒழுங்கை,
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

சுகாதார வைத்திய அதிகாரி,
ஊர்காவற்றுறை.

(சி-4786)

## குணம் வீடியோ ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை

புதிய E 180 கசெட்டில் பதிவு செய்யப்பட்ட புதிய படங்கள் மலிவு விலையில் விற்பனை செய்கின்றோம்.

படங்களின் விவரம்:

Mr. கார்த்தி, இதயத்தாமரை
மௌனப்பேசட்டும்
மன்னிக்கவேண்டுகிறேன்
பட்டணப் தான்போகலாமடி
பெரியவீட்டு பண்ணைக்காரன்
பகலில்பௌர்ணமி
என்உயிர்தோழன்
ஆட்டோராஜா
இதயதேவதை

முதலிய படங்கள் விற்பனைக்கு உண்டு.
அனைத்தும் ஒறிஜினல் பிரதிகள்.

ஒரு படப்பிரதியின் விலை ரூபா 200,00 மட்டும்

அத்தோடு புதிய வெளியீடுகள்:
சிலம்பு, அஙபுச்சின்னம்

**குணம் வீடியோ,**
கலைவாணி வீதி.
(C. T. B. டிப்போவிற்கு முன்பாக உள்ள வீதி,)
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(சி-4783)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வதந்தி பரப்பாதீர்!

இது யுத்த காலம். மக்கள் நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இராணுவத் தாக்குதல்களின் அனர்த்தங்கள் தம்மை எந்த நேரமும் வந்தடையலாம் என்ற மனப் பதற்றத்துடன் அவர்கள் வாழ்கிறார்கள்.

வீட்டுக் கதவு அடிபட்டு விட்டாலும் குண்டுச் சத்தம் எனத் திறுக்குறுகிறார்கள். காற்றிலிருந்து வீண் என்று ஒரு சத்தம் வந்துவிட்டால் ''ஹெலி'' வருவதாக எண்ணிப் பயப்படுகிறார்கள்.

குழந்தைகள், வயோதிபர்கள் மட்டுமல்லர்; நோயாளர்கள் உடல் நலிந்தவர்கள் மட்டுமல்லர்; திடகாத்திரமுள்ள சாதாரண மனிதர்களும், நடுத்தர வயதினரும் வான், கடல், தரைப்பகுதிகளில் பயன்படுத்தப்படும் நவீன ஆயுதங்களால், அவற்றை இயக்குவதன் விளைவுகளால் உடல் குறுகுகிறார்கள்.

இந்தக் காலத்தில் யுத்த நடவடிக்கைகளால் நேரடியாகப் பாதிக்கப்படாதவர்களின் உடல் நிலை கூட, ஏதோ ஒரு விதத்தில் அல்லது பல்வேறு விதங்களில் பாதிக்கப்படும் அபாயம் உண்டு.

அவை போதாவென்று மக்களை உடல் ரீதியாக உபாதையுறச்செய்யும் வதந்திகள் பேராபத்தானவை. இல்லாதவற்றை மற்றவர்கள் நம்பத் தகுந்த விதத்தில், கற்பனையில் வடித்துப் பரப்பப்படும்வதந்திகள், மக்களின் பய உணர்வை அதிகரித்து பெரும் விபரீதங்களை உண்டாக்க வல்லவை.

வதந்திகளைப் பரப்புவதில் வல்லவர்கள் பலர் உள்ளனர். தாம் நேரில் கண்டது போல சில பொய்களை, மற்றவர்கள் நம்பத் தகுந்த விதத்தில் புனைந்து சொல்வதில் அவர்களுக்குத் தனி இன்பம். வேண்டுமென்றே வதந்தி பரப்பும் ரகத்தினர் அவர்கள். மற்றவர் சொன்னது சரியானது தானா என்பதை உறுதி செய்யாமல் அதனை நம்பி அடுத்தவர்களுக்குச் சொல்பவர்கள் ஒரு சாரார். இப்படியே ஆள் மாறி ஆள் நகர்ந்து எல்லா இடமும் வதந்தி பரவி விடுகிறது.

மற்றவர்கள் சொல்வதை அப்படியே நம்பி அடுத்தவருக்குச் சொல்லும் பழக்கம் தமிழ் மக்களிடையே அதிகம். (அரட்டை அடித்து வீண் பொழுது போக்குவதில் இருந்து வளர்ந்த பழக்கத்தின் விளைவு அது.) இது விடயத்தில் கவனமாக இருந்தால் வதந்திகள் பரவுவதைத் தடுக்கலாம் வதந்திகளால் ஏற்படும் விபரீதங்களை உணர்ந்து, தனக்கு நன்றாகத் தெரியாத ஒன்றை, சரியாகத் தெரியாத ஒன்றை மற்றவர்களுக்குச் சொல்வதில்லை என்று ஒவ்வொருவரும் பொறுப்பாக நடந்து கொண்டால் புரளிகள், வதந்திகளால் ஏற்படும் அனர்த்தங்களைத் தவிர்க்கலாம்; தடுக்கலாம்.

முதலாமவன் கட்டி விட்ட புரளி அல்லது வதந்தி, ஐந்தாமவனைச் சென்றடையும் போது கண், காது மூக்கு எல்லாம் வைக்கப்பட்டு பத்து மடங்கு பொய்யாகப் பெருத்து விடும் அதற்கப்பால் அதனைக் கேட்பவர்கள் பதறி நடுங்கியும், அல்லோல கல்லோலப் பட்டும் அவதியுற வேண்டியது தான்.

யுத்த நடவடிக்கையால் நொந்து கொண்டிருக்கும் மக்களை வதந்திகளால் மேலும் வதைப்பது அக்கிரமம். எனவே, இவ்வேளையில், ஒவ்வொருவரும் தாம் மற்றவருடன் உரையாடும் போது, தமக்குத் தெரியாத விடயங்களைப் பற்றிப் பேசாதிருப்பதே நல்லது. அடுத்தவர் சொல்வதற்கு ஆதாரமுண்டா என்பதை உறுதிப்படுத்தாமல் நம்பி விடவும் கூடாது.

வதந்திகளைப் புனைவோரும், அவற்றைப் பரப்புவோரும் சமூக விரோதிகள். அவர்கள் தகுந்தபடி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். மேற்சொன்ன இரு சாராரையும் இனங்கண்டு தண்டிப்பதற்கு, சமூக நலனில் அக்கறை உள்ள சகலரும் உதவ வேண்டும்.



கடந்த வெள்ளியன்று யாழ். நகரில் இடம்பெற்ற போர் விமானக்குண்டு வீச்சில் சேதமுற்ற வீடுகளில் சில. (உ)

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிரந்தரமாக இடமளிக்க முடியாது

## ஒரிஸ்ஸா அரசு உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

புவனேஸ்வர், ஜூலை 3

இலங்கைத் தமிழ் அகதிகளை நிரந்தரமாக கோரப்பூர் மாவட்டத்தில் தங்க வைக்க முடியாது என்று ஒரிஸ்ஸா மாநில அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

தலைநகர் புவனேஸ்வரில் இந்த அறிவிப்பு கடந்த ஞாயிறு வெளியிடப்பட்டது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து, வடக்கு – கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 1,616 இலங்கைத்தமிழ் அகதிகள் ஒரிஸ்ஸா மாநிலத்தில் கோரப்பூர் மாவட்டத்தில் புதுடில்லி அரசால் தங்க வைக்கப்பட்டனர்.

அவர்களில் 1309 பேர் தப்பி தமிழ் நாடு சென்று விட்டனர்.

இன்னமும் 577 இலங்கைத் தமிழர்கள் ஒரிஸ்ஸா அகதி முகாம்களில் உள்ளனர்.

ஒரிஸ்ஸா அரசுவெளியிட்ட அறிக்கையில், இலங்கைத் தமிழருக்கு மனிதாபிமான அடிப்படையில் இடமளித்ததாகவும், அவர்களைத் தொடர்ந்து தங்க வைக்க முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த அகதிகளைப் பராமரிக்க இந்திய உள்துறை அமைச்சு ஏற்கனவே [இந்தியப் பணத்தில்] 20 லட்சம் ரூபாவை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ–எ]

## படையினர் தங்கி இருந்த கட்டடங்கள் நிர்மூலம்

கொழும்பு, ஜூலை 03

கிரான், சளுவாஞ்சிக்குடி பகுதிகளில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த கட்டடங்கள் பல கடந்த வெள்ளிக்கிழமை நிர்மூலமாக்கப்பட்டன.

சம்மாந்துறையில் பொலீஸ் -இராணுவ இணைப்புக்குழு ஒன்று பத்து இளைஞர்களைக்கைது செய்தது.

இத்தேடுதலில் 300 படையினர் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 5 சகோதரர்களின் நிலைமை தெரியாது தவிக்கும் குடும்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

மட்டக்களப்பில் உள்ள தமது ஐந்து சகோதரர்களின் நிலமை தெரியாது கவலையுடன் காத்திருக்கிறது திருமலையைச் சேர்ந்த இளம் குடும்பம்.

சுன்னாகத்தில் தங்கியுள்ள லிங்கராசா என்னும் இந்த இளம் குடும்பத்தை உதயன் செய்தியாளர் சந்தித்தார்.

நிலாவெளியில்கடைநடத்தி வந்த நாம் கடந்த 18 ஆம் திகதி அங்கிருந்து புறப்பட்டு எவ்வளவோ பிரச்சினைகளின் மத்தியில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம்.

எனது அண்ணர் கார்த்திகேசன் மட்டக்களப்பு செட்டிப்பாளையத்தில் கடை நடத்தி வந்தார். அவருடன் எனது சகோதரர்களான சிவகுமாரன் (வயது 21) சத்தியபாமா (வயது 16) சிவகாமி (வயது 14) ஜானகி (வயது 12) ஆகியோர் தங்கி படித்து வந்தார்கள். இவர்கள் பற்றி 14 ஆம் திகதிக்கு பின் எந்த தகவலும் இல்லை.

இப்படி திருமதி லிங்கராசா கூறினார்.

தமது தந்தையும், தாயும் நிலாவெளியில் நின்று அவர்கள் பற்றிய விவரங்களைப் பெறக் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## பீதி வேண்டாம் என்கிறார் தொண்டமான்

கொழும்பு, ஜூலை 3

நாட்டின் இன்றைய நெருக்கடியை எண்ணி மலையகத் தமிழ் மக்கள் அச்சமும் பீதியும் அடையத்தேவையில்லை அமைச்சர் தொண்டமான் இப்படிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மலையகத் தமிழர் அனைவரும் ஒற்றுமையாகவும் நிதானமாகவும் மனஉறுதியுடனும் இருக்கும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-எ)

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஊழியருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை3

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகங்களில் கடமை புரியும் இடம் பெயர்ந்த உத்தியோகத்தர்கள், தற்போது தாம் தங்குயிருக்கும் பிரிவு உதவி அரசாங்க அதிபர்களைச் சந்தித்து தங்கள் வரவைப் பதிவு செய்யும்படி கோரப்படுகின்றனர்

முல்லைத்தீவு. வவுனியா ஆகிய அலுவலங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், அவர்களுக்குரிய ஜூன் மாத சம்பள முற்பணம் பெறுவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மாவட்ட முகாமையாளர்களுடன் இம் மாதம் 9 ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நேற்று 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடிய தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்களால் மேற்கூறப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்டது. [இ–எ]

## படையினரிடம் 200 பஸ்கள்

கொழும்பு, ஜூலை 3

வடக்கு-கிழக்குப் பகுதியில் 200 பஸ்கள் இலங்கை ஆயுதப் படையினரின் பொறுப்பில் உள்ளன.

போக்குவரத்து அமைச்சர் விஜேபால மெண்டிஸ் முன்சண்ட தகவலை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகள் 22 பஸ்களை வைத்திருப்பதாகவும் அமைச்சர் மெண்டிஸ் மேலும் சொன்னதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது. (இ-எ)

## இடம் பெயர்ந்தோர் விவரம் திரட்டப்பட்டு வருகிறது

புங்குடுதீவு, ஜூலை 3

யாழ் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக இடம் பெயர்ந்தோர் பற்றிய விவரங்களை உடனடியாகத் திரட்டுமாறு சகல கிராம சேவை அலுவலர்களும் கேட்கப்பட்டுள்ளனர்

இதன் அடிப்படையில் வெளிமாவட்டங்களில் இருந்து புங்குடுதீவுப்பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளவர்களின் விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் இப்பகுதியின் 12 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் அகதிகளின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கே இவ்விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

## நெல் ஏற்றச் சென்ற போது ஹெலியிலிருந்து தாக்குதல்

### இருவர் அதே இடத்தில் மரணம்

பரந்தனில் இருந்து கிளிநொச்சி நெற்சந்தைப்படுத்தும் சபைக்கு நெல் எடுத்து வர லொறியில் சென்ற பொழுது ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தேன். இதனால் என்னுடன் நெல் ஏற்ற வந்தவர்களில் இரண்டு பேர் எனக்குப் பக்கத்திலேயே மரணமானார்கள்.

கடந்த 24 ஆம் திகதி பரந்தனில் இருந்து கிளிநொச்சிக்கு நெல் எடுக்கச் சென்ற பொழுது காயங்களுக்கு இலக்கான இ சோமசுந்தரம் [வயது 24] இவ்வாறு தெரிவித்தார்.

மானிப்பாய் யாழ்.வைத்தியசாலைப் பிரிவில் தற்போது அவர் கிசிச்சை பெற்று வருகிறார் இந்தச் சம்பவத்தில ரமசீலன் சவுந்தன் ஆகியோரே மரணமானவர்கள் ஆவர். (இ-10)

## அரசின் பேரினவாதத்துக்கு எதிராக ஐக்கியம் வேண்டும்

### கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை.3

தமிழ் தேசிய இனத்தின் மீது மீண்டும் ஒரு யுத்தத்தை தொடுத்த ரணசிங்க பிரேமதாசா அரசின் பேரினவாத நடவடிக்கைகளுக்கெதிராக தமிழ் பேசும் மக்கள் ஐக்கியப் படவேண்டும்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கமிட்டியின் சார்பில் அதன் செயலாளர் எம். ஏ. சி இக்பால் வெளியிட்ட அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யுத்த விமானங்கள்மூலம் பல நூறு பாரிய வெடி குண்டுகளை வடக்கு கிழக்கு மாகாணத்தில் வீசுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முறியடித்து விடலாம் என அரசு கனவுகாணுகிறது.

இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ் சேனநாயகா தொடக்கம் இன்றைய ... வரை காலத்துக்கு காலம் ... வர்கள், தமிழ் தலைவர்களையும், தமிழ் பேசும் மக்களையும் ஏமாற்றி வந்ததன் விளைவே இன்று நடைபெறும் அரச-புலிகள் யுத்தமாகும்.

இந்தயுத்தத்தின்மூலம் நாடு முழுவதையும் குறிப்பாக வடக்கு. கிழக்கு மாகாணத்தை சிங்கள பேரினவாதத்தின் ஆளுமைக்கு உட்படுத்த அரசு விரும்புகிறது.

ஆனால் அரசு அதில் வெற்றிபெறப்போவதில்லை பதிலாக சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் மேலும் விரிசல்களை உண்டாக்கவும் யுத்தத்தின் கால எல்லையை நீட்டவுமே உதவும்.

அரசு தமிழ் பேசும் மக்கள் மேல் தொடுத்த யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ)

# வவுனியா நகரம் முற்றாக துண்டிக்கப்பட்டு விட்டது

## மனித சஞ்சாரம் இல்லாத சுடுகாடாகியது; அகதியாகிய அரசாங்க அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 3

''வவுனியா நகரம் மற்றைய தமிழ்ப் பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது. வவுனியா நகரப் பகுதியில் இருந்து 6 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளன. ஜன சஞ்சாரம் அற்ற சுடுகாடு போல் வவுனியா நகரம் காட்சியளிக்கிறது''

இப்படிக் கூறுகிறார் வவுனியா அரச அதிபர் திரு. செ. பத்மநாதன்.

நிவாரண உதவிகளைப் பெற கொழும்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்ற பின்னர் நேற்று அவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கடந்த ஜூன் 14 ஆம்திகதியில்இருந்துஜூலை1 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமைவரை அங்குள்ளநிலைமை குறித்து விளக்குகையில் அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:—

14 ஆம் திகதி பொலீஸ் நிலையத் தாக்குதலுடன் ஆரம்பமான பிரச்சினை மறுநாள் 15 ஆம் திகதி பெரும் மோதலாக உருவெடுத்தது.

15 ஆம் திகதி காலை 11.30 க்கு ஆரம்பமான மோதல் பகல் 3 30 மணிவரை நடந்தது. மக்கள் எல்லோரும் வெளியேறி விட்டார்கள் நானும் எனது அலுவலக பணியாள் யோகராசாவும் எனது வாசஸ்தலத்தில் இருந்தோம் நாம் உயிர் தப்பியது பெரும் அதிசயம்.

### வீதி எங்கும் சடலங்கள்

ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஜோசேப்முகாமில் இருந்து வெளியே வந்தனர். 16 ஆம் திகதி காலை நகரப் பகுதியில் இராணுவம் தென்படவில்லை. வீதியில் சென்ற வேளை சடலங்களே தென்பட்டன. மொத்தமாக ஒரு முஸ்லிம் உட்பட 14 பேர் சடலமாகக் கிடந்தனர். இதில் இரு பெண்களும் அடங்குவர்.

பொது சுகாதாரப் பரிசோதகர் அந்தோனிப்பிள்ளையும் அவரது மனைவியும், ஓய்வு பெற்ற நில அளவையாளர் சிவலிங்கமும் அந்தோனிப் பிள்ளையின் வீட்டின் பின்புறம் சடலமாகக் கிடந்தனர். அவரது முன் விறாந்தையில் முன்வீட்டுக் காரரின் இரு சடலங்கள் கிடந்தன. அடுத்த வீட்டில் 17 வயது இளைஞன் ஒருவனின் சடலம் கிடந்தது. முன் வீதியில் இரு சடலங்கள் கிடந்தன. அருகில் உள்ள மரவேலைத்தளத்தில் மாதகலைச் சேர்ந்த ஒருவரின் சடலம் கிடந்தது. முஸ்லிம் ஒருவரது சடலம் உட்பட 5 சடலங்கள் வீதியில் கிடந்தன.

அந்தநேரம் ஆஸ்பத்திரி மூடிக்கிடந்ததால் பிரேத பரிசோதனையோ மரண விசாரணையோ இன்றி அவர்களது படங்களை எடுத்து அவரவர் இனத்தவர் மூலம் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன

இரு சடலங்களுக்கு உரியவர்களின் இனத்தவர்கள் இல்லாதகால் ... என்னும் கிராமசேவையாளர் மூலம் அவை அடக்கம் செய்யப்பட்டன.

### கடைகள் எரிக்கப்பட்டன

அன்று 7 கடைகள் எரிக்கப்பட்டன 3 கடைகள் உடைத்துக் கொள்ளையிடப்பட்டன பல வீடுகள் எரிக்கப்பட்டன. உடைக்கப்பட்ட கடைகளில் மதுபான விற்பனைக் கடையும் ஒன்றாகும் அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கியும் உடைக்கப்பட்டிருந்தது.

17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டேன். 6 ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாக இருப்பதாகவும் அவர்களுக்கு உணவு வழங்க வேண்டி உள்ளதாகவும் இராணுவத்தினரிடம் தெரிவித்தேன் மறுநாள் திங்கள் 18 ஆம் திகதி சகல திணைக்கள அதிகாரிகளை அழைத்து வரும்படி கூறப்பட்டது.

### அகதியானேன்

ஆனால் மறுநாள் மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. இருப்பது நல்லதல்ல என்ற காரணத்தால் சைக்கிளில் புறப்பட்டு காட்டுப்பாதைகளூடாகச் சென்று நொச்சிமோட்டை தமிழ்க் கலவன் பாடசாலையில் அகதியானேன்.

19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாகராசா என்னும் எனது சக அதிகாரியுடன் மீண்டும் சைக்கிளில் காட்டுப் பாதை ஊடாக முகாமுக்கு சென்றேன். எமது உணவுக் களஞ்சியத்தில் இரு மாதத்துக்கு தேவையான மா, அரிசி என்பன இருக்கின்றன. அவற்றை எடுக்க அனுமதி தரும்படி கேட்டேன். 20 திகதி புதன்கிழமை தாம் யுத்த நிறுத்தம் மேற்கொள்வதாகவும் புலிகளையும் யுத்தநிறுத்தம் செய்யும்படியும் இராணுவத்தினர் கூறினார்கள்.

### உணவு எடுக்க வந்தவர்கள் மீது சுட்டனர்

இரு பகுதியினரும் சம்மதம் அளித்ததை அடுத்து லொறியுடன் சென்றோம்.

லொறிகளைத் தூரத்தில் விட்டு உள்ளே சென்றோம். நானும், அதிகாரிகளும் கதைத்துக் கொண்டு நின்றபோது லொறிகளில் வந்த இருவர் நகரப் பகுதிக்குள் வந்தனர். உடனே இராணுவத்தினர் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய அவர்கள் ஓடி விட்டார்கள். லொறிகளும் ஓடிவிட்டன.

பின்பு ஒரு மாதிரியாக மூன்று லொறிகளைக் கொண்டு வந்து வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு ப.நோ.கூ.சங்கத்துக்கு அரிசி கொடுத்தோம்.

மறுநாள் 21 ஆம் திகதி சைக்கிளில் அநுராதபுரம் போய் அரச அதிபரைச் சந்தித்து வாகனம் எடுத்து கொழும்பு சென்று அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு சரித்தரத்வத்தையுடன் பேச்சு நடாத்தி வவுனியா நிலைபற்றி அறிக்கை சமர்ப்பித்தேன்.

வடமாகாணத்தில் நிலவும் உணவு, எரிபொருள் தட்டுப்பாடு குறித்து விளக்கி, வவுனியா வரை ரயில் பாதை உள்ளதால் உணவுப் பொருள்களை அனுப்பும்படி கேட்டேன்.

அங்கு சிவில் நிர்வாகம் ஏற்பட உதவ வேண்டும். அதன் மூலம் வட மாகாண உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கலாம் என்றும் கூறினேன்.

பின்னர் வவுனியா உணவுக் களஞ்சியத்தில் உள்ள பொருள்களை வெளியே எடுக்கவும், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம், சர்வோதயம், போரூட் வழங்கிய உதவிகளை அங்கு எடுத்துச் செல்லவும் உதவும்படி விடுத்த கோரிக்கையை ஆணையாளர் ஏற்று உதவினார்.

பின்னர் அநுராதபுரத்தில் இருந்து லொறி மூலம் வவுனியவுக்குப் பொருள்களைக் கொண்டு வந்து விநியோகித்தேன்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# உதயன்

03 - 7 - 1990 செவ்வாய்க்கிழமை







## ஆயுதங்களுடன் நடமாடும் எவரும் சுடப்படுவார்கள்

### கிழக்கில் ரஞ்சன் அறிவிப்பு

கொழும்பு ஜூலை 3

ஆயுதங்களுடன் நடமாடுபவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் சுடப்படுவர்.

இப்படி பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருதுக்கு விஜயம் செய்தபோது சொன்னார்.

''ஆயுதங்களுடன் எவரையும் நடமாட அனுமதிக்மாட்டோம். ஜே. வி. பி. யினரை அழித்தது போன்று விடுதலைப் புலிகளையும் அழித்து விடுவோம்'' — என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கடந்த சனிக்கிழமை நிலைமைகளை நேரில் கவனிப்பதற்கு மட்டக்களப்பு, கல்முனைப் பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

அவருடன் அமைச்சர்கள் தயாரத்தினரா, ஏ. ஆர். மன்சூர், ரெலோ எம்பிக்களான திரு. கருணாகரன், திரு. திவ்யநாதன் வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சர் அபுயூசுப், முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. ஹிஸ்புல்லா, வடக்கு - கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாப் சேகு இஸ்ஸதீன் புளொட் இயக்கப் பிரமுகர் திரு. சித்தார்த்தன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்தாரத்வத்தை, கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகியோரும் சென்றிருந்தனர். (ஒ-எ)

## பாலம் தகர்க்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 3

வவுனியா - யாழ்ப்பாணம் போக்குவரத்து பாதையை இணைக்கும் நொச்சிமோட்டைபூபதியார் அணைக்கட்டுப்பாலம் கடந்த சனிக்கிழமை தகர்க்கப்பட்டது.

40 அடி நீளமான இந்தப் பாலத்தில் பெரும் சேதமேற்பட்டதால் யாழ் - வவுனியா போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கருணாநிதியுடனும் பேர்னாட் பேசுவார்

புதுடில்லி, ஜூலை 3

இலங்கை வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினா நேற்று புதுடில்லி போய்ச் சேர்ந்தார்.

இவர் தனது இந்தியப் பயணத்தின் போது தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதியையும் சந்தித்துப் பேசுவார் என்று ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது. (ஒ-எ)

## கொழும்பிலிருந்து வியாழன் புறப்பட்ட 4பஸ்கள் திரும்பின

### பயணிகள் பலருக்கு அடிகாயங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

கடந்த வெள்ளிக்கிழமை மதவாச்சி இராணுவ முகாமிலிருந்து அனுராதபுரம் நோக்கித் திருப்பிவிடப்பட்ட நான்கு போக்குவரத்துச் சபை பஸ்களும் கொழும்பை அடைந்துள்ளன.

இந்தப் பஸ்களில் பயணம் செய்த யாழ். மாவட்டத் தமிழர்கள் தற்போது வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலில் தங்கி இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பலர் காயம் அடைந்த நிலையில் உள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இருந்து 270 தமிழருடன் வவுனியா நோக்கிப் புறப்பட்ட 6 போக்குவரத்துச் சபை பஸ்களில் நான்கே மீண்டும் கொழும்பு திரும்பி உள்ளன.

இந்த 6 பஸ்களும் வெள்ளிக்கிழமை மதவாச்சியை அடைந்தபோது வவுனியா வரை செல்பவர்கள் மட்டுமே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் வவுனியா வரை செல்வோருடன் 2 பஸ்கள் பயணத்தை தொடர நான்கு பஸ்கள் கொழும்பு நோக்கி திரும்பிச் சென்றிருந்தன. (இ)

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் வயித்திலிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய இரத்தினம் வயித்திலிங்கம் [Sri Lanka Ports Authority] 30. 6. 90 அன்று சிவபதமடைந்தார். அன்னார் சிவஞானவதியின் [Bon] அன்புக்கணவரும் வசந்தி [யாழ். வேம்படி மகளிர் கல்லூரி], சாந்தி, ஜெயந்தி [யாழ். வேம்படி மகளிர் கல்லூரி], உமாசுதன் [யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 30. 6. 90 அன்று நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

''ஞான இல்லம்''
தியேட்டர் ஒழுங்கை,
இணுவில்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(13557)

### பிலிப் அந்தோனிப்பிள்ளை

220, இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பிலிப் அந்தோனிப்பிள்ளை 01-07-1990 இல் காலமானார்.

இவர் பிலோமினாவின் அன்புக் கணவரும், ஆரோக்கியம் யோசப் சுப்பையா, புஸ்பராணி ஆறுமுகம், மேரி ஜொசப்பின் சின்னச்சாமி (பதிவாளர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), சுந்தரலிங்கம் ஆகியோரின் தகப்பனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 2-7-90 இல் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
[13490] சி. மேரி ஜொசப்பின் [இராசாத்தி]

## வடக்கு - கிழக்கு நிலை குறித்து எல்லாக் கட்சியினருக்கும் விளக்கம்

### ஜனாதிபதியும், ரஞ்சனும் விவரித்தனர்

கொழும்பு, ஜூலை 3

வடக்கு-கிழக்கு நிலைபற்றி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்றுக்காலை நடந்த சந்திப்பின்போது விவரித்துக் கூறினார்.

வடக்கு-கிழக்கின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும்படி அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கேட்டனர்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா முழு விவரங்களையும் தெரிவித்தார்.

சாதாரண குடிமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவதை ஆகக்குறைந்த மட்டத்திற்கு மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

குடிமக்களின் நலன் குறித்து மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக அரசு உறுதியளித்தது.

இதுபற்றி பாதுகாப்புப் படையினருக்குத் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்களை அரசு வழங்கி வருவதாகவும், அரசின் சார்பில் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அகதிகளைச் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பி வைப்பதற்கு முன்னர் அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று அரசின் சார்பி்ல் உறுதியளிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி கிரமமாக அறிவிக்கும்படி கட்சிப் பிரதிநிதிகள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மேலும் பேச்சுக்கள் நடத்தப்பட்டால் அதுபற்றி தங்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

இவ்வாறு செய்வதற்கு ஜனாதிபதி இச்சந்திப்பின் போது விருப்பம் தெரிவித்தார். (ஒ-எ)

## வடக்கு, கிழக்கு நிலைமையை சார்க் நாடுகளுக்கு விளக்க சர்வகட்சி பிரதிநிதிகள் குழு

கொழும்பு, ஜூலை 3

வடக்கு, கிழக்கு நிலைமை குறித்து சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழு ஒன்றை இலங்கை அரசு விரைவில் அனுப்ப உள்ளது.

இக்குழுவிற்கு நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முஹம்மது தலைமைவகிப்பார்

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி பிரேமதாஸா சந்தித்துப் பேசினார்.

அப்போது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒன்றை சார்க் நாடுகளுக்கு அனுப்பி வடக்கு, கிழக்கு உண்மைநிலை பற்றி விளக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் யோசனை ஒன்றைத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி அந்த யோசனையை ஏற்றுக்கொண்டார்.

நேற்றைய சந்திப்பின் போது, பதில் எதிர்கட்சித் தலைவரும் சுதந்திரக்கட்சி எம். பியுமான அனுரா பண்டாரநாயக்கா ஈ.பி.ஆர்.எல். எவ்வைச் சேர்ந்த எம். பி. சுரேஷ் பிரேமச்சந்திரன், ஐக்கிய சோஷலிச அணி எம் பி. அத்தாவுட செனவிரத்னா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பி ஜனாப் ஹிஸ்புல்லா, ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பிக்களான எட்வர்ட் செபஸ்தியாம்பிள்ளை, எம். இராமலிங்கம் மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி தினேஷ் குணவர்த்தனா, ரெலோ எம். பி. ஜே. திவ்யநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசின் சார்பில் அமைச்சர்கள் ரஞ்சன்விஜேரத்தினா, ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேறு கடமைகள் இருந்த காரணத்தினால் பிரதமர் விஜேதுங்கா, நீதி அமைச்சர் சாகுல் ஹமீது ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

முப்படைகளின் தளபதிகள்- ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர். (உ-எ)

## வங்கியில் வாடிக்கையாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். ஆஸ்பத்திரிவீதி இலங்கைவங்கிக் கிளையில் நேற்றுக்காலை 9 மணிமுதல் 9-30 மணிவரை சுமார் அரைமணி நேரம் பணக்கொடுக்கல் வாங்கல் வேலைகள் நடைபெற்றன.

சுமார் ஐம்பதுக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் நேற்று வங்கிக்கு வந்திருந்தனர். அவர்கள் காலையிலேயே வங்கிக்கு வந்துவிட்டனர்.

இன்னும் நிலைமை சுமுகமாக இருந்தால் அரைமணி நேரம் பணக்கொடுக்கல் வாங்கல் நடைபெறுமென வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார். [இ-10]

## ரெலோ கோரிக்கை

சென்னை, ஜூலை 3

இலங்கைப் படையினரின் தாக்குதலில் இருந்து தமிழர்களைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கும்படி சென்னையில் உள்ள ரெலோ அமைப்பாளர் திரு. ஸ்கந்தா இந்திய மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுள்ளார். (அ-எ)

## நிவாரணம் தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

அரச சார்பற்ற நிறுவனங்களின் அகதிகள் நிவாரணப் பணி தொடர்பான கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியிலுள்ள நல்லூர் ப.நோ.கூ. சங்க கட்டடத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் அரச அதிபரும், உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்வார்கள். (ஒ)

## காங்கேசனில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

நேற்று முன்தினம் காங்கேசன்துறை முகாம் காவல் அரணில் காவல் கடமையில் நின்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் ஜக்சன் என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ-9)

14 ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டம்:

## அரை இறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன

மிலான், ஜூலை 3

பதினான்காவது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று செவ்வாய் ஆரம்பமாகின்றன.

இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா, இத்தாலி ஆகிய நான்கு நாடுகள் அரை இறுதிப்போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

போட்டி விபரம் வருமாறு:

ஜூலை 3 ஆர்ஜென்ரீனா எதிர் இத்தாலி (இடம் நேப்பிள்ஸ்) ஜூலை 4:- இங்கிலாந்து எதிர் மேற்கு ஜேர்மனி (இடம்: ரியூறின்).

### ஆர்ஜென்ரீனா

1978, 1986 ஆகிய ஆண்டுகளில் நடந்த உலக உதைபந்தாட்டப் போட்டிகளில் ஆர்ஜென்ரீனா அணி சம்பியன் ஆனது.

1978 இல் நெதர்லாந்து அணியை 3-1 கோல்களால் தோற்கடித்து சம்பியன் ஆன ஆர்ஜென்ரீனா அணி 1986 இல் நடந்த 13 ஆவது உலக கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் 3-2 கோல்களால் மேற்கு ஜேர்மன் அணியைத் தோற்கடித்து உலக கிண்ணத்தைச் சுவீகரித்தது.

### இத்தாலி

1934, 1938, 1982ம் ஆண்டுகளில் நடந்த உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இத்தாலி உலக சம்பியனானது.

1934 இல் செக்கோஸ்லேவியாவை 2-1 கோல்களால் இத்தாலி வென்றது.

1938இல் ஹங்கேரியை4-2 கோல்களால் இத்தாலி தோற்கடித்தது.

1982 இல் மேற்கு ஜேர்மனியை 3-1 கோல்களால் இத்தாலி வென்றது.

### இங்கிலாந்து

இங்கிலாந்து உலக கிண்ண உதைபந்தாட்டச் சம்பியனாக ஒருமுறை மட்டுமே வென்றது.

1966இல் இங்கிலாந்தில் நடந்த எட்டாவது உலக கிண்ணப் போட்டியில் மேற்கு ஜேர்மனியை 4-2 கோல்களால் இங்கிலாந்து தோற்கடித்தது.

அச்சமயம் இங்கிலாந்து அணியின் கப்டனாக பொபி மூர் இருந்தார்.

### மேற்கு ஜேர்மனி

மேற்கு ஜேர்மன் இரண்டு முறை உலக கிண்ணத்தை சுவீகரித்தது.

சுவிட்ஸர்லந்தில் 1954 இல் நடந்த ஐந்தாவது உலக கிண்ணப்போட்டியில் ஹங்கேரியை 3-2 கோல்களால மேற்கு ஜேர்மனி தோற்கடித்தது.

1974 இல் மேற்கு ஜேர்மனி, மியூனிச் நகரில் நடந்த பத்தாவது உலக கிண்ணப் போட்டியில் நெதர்லந்து அணியை 2-1 கோல்களால் மேற்கு ஜேர்மனி தோற்கடித்தது.

1954இல் வால்டர் பிரிஸ்ும் 1974இல் பிரான்ஸ் பெக்கென்போரும் மேற்கு ஜேர்மன் அணிகளின் கப்டன்களாக விளங்கினர். (இ-எ)

## ஈழப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணப் பிரச்சினையில் பாகிஸ்தான் தலையிடக்கூடும் எனத் தாம் நம்புவதாக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்திருப்பது தெரிந்ததே.

ஆனால் —

பாகிஸ்தான் அப்படித் தலையிட இடம்கொடுக்கப்படவில்லை; இடம் கொடுக்கப்படவும் மாட்டாது-என்று பேர்னாட் திலகரத்தின இந்திய வெளியுறவு அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்.

புதுடில்லி சென்றிருக்கும் பேர்னாட் திலகரத்ன நேற்று முதலில் இந்திய வெளியுறவுச் செயலாளர் முகுந்த்துபேயை சந்தித்து உரையாடினார்.

பின்னர் வெளியுறவு அமைச்சர் குஜ்ராலை அவர் சந்தித்தார். அப்போது இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத்தின் செய்தி ஒன்றை இந்திய வெளியுறவு அமைச்சரிடம் அவர் கையளித்தார். [உ-9]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-07-1990 இல் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டைக்குள் 17 பேர் படுகாயமுற்ற நிலையில்!

யாழ் கோட்டைக்குள் படுகாயமடைந்த நிலையில் 17 சிப்பாய்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டியது அவசியம்.

அவர்களை வெளியே கொண்டுவர அரசு சகல முயற்சிகளையும் எடுக்கும்.

-இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

கோட்டை முகாமில் உள்ள படையினரில் 112 பேர் பொலீஸ் வீரர்கள். 89 பேர் இராணுவத்தினர்.

112 பொலீஸாரில் இருவர் மட்டுமே சிங்களவர்கள். ஏனையோர் தமிழரும், முஸ்லிம்களும் ஆவர்.

-இப்படி அமைச்சர் மேலும் சொன்னார். (உ-எ)

## நாடாளுமன்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோம்.

நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்பெறுபேறாய் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை பயக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டால் தேவையான ஆதரவை வழங்க வேண்டி வரும் என்பதற்காகவே நாடாளுமன்றத்திற்குச் சென்றோம்.

ஆனால் இனவாதத்தைக் கக்கும் எரிமலையாக நாடாளுமன்றம் மாறுகையில் - அதற்கு எம்மவரில் ஒரு சாரார் முண்டு கொடுக்கும் வகையில் செயற்படும்போது- நாம் இந்த நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

எமது மக்கள் அச்சமும், பதட்டமும் நிறைந்த சூழலில் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே அவலப்பட வேண்டிய வேளையில்- கண்மூடித்தனமாக எமது மக்கள் கொல்லப்படுகின்ற இந்த நிலையிலும்- கையாலாகாதவர்களாகநாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது வெட்கக்கேடான செயலாகவே நாம் உணர்கின்றோம்.

எனவே, நாடாளுமன்றத்திலிருந்து முற்றாகவிலகுவதற்கு முதற்படியாக நாடாளுமன்றத்தினை எதிர்வரும் 5 ஆம் திகதியிலிருந்து பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளோம். ஏற்கனவே சர்வகட்சி மாநாட்டின் அமர்வுகளிலிருந்து விலகி நிற்கும் நாம் பாராளுமன்றத்திலிருந்தும் விலகி நிற்போம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## மாங்குளத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் குண்டுகளை ஏவினர். அந்த குண்டுகளில் ஒன்று தவறுதலாக உள்ளேயே விழுந்துவெடித்தது இதனால் சில இராணுவத்தினர் உயிரிழந்தனர், சிலர் காயமடைந்தனர்.

தொடர்ந்து ஹெலிக்கொப்டரிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்றும் முகாமினுள்ளேயே விழுந்து வெடித்தது. அதிலும் சில இராணுவத்தினா பலியாகினர்.

நேற்றுக் காலையிலும் முகாமைவிட்டு வெளியேற முற்பட்ட இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

அதனையடுத்து இராணுவத்தினர் முகாமிற்குள் சென்று பதுங்கு குளிக்குள் புகுந்தனர்.

அவ்வேளை பதுங்கு குளிக்குள்ளே அவர்கள் வைத்திருந்த குண்டு ஒன்று தவறுதலாக வெடித்தது. அதனாலும் சில சிப்பாய்கள் காயமடைந்திருக்கலாம் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## 19 படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனர்;

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

முள்ளிக்குளம் பகுதியில் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## வீரமுனையில் 84 இளைஞர்கள் சுட்டுக்கொலை?

யாழ்ப்பாணம், ஜூலை 3

அம்பாறை வீரமுனை என்ற இடத்தில் கடந்த சனியன்று 84 இளைஞர்களை ஸ்ரீ லங்கா படைகள் சுட்டுக்கொன்றதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்த இளைஞர்களைக் கைது செய்ததாகவும்—

பின்னர் முகாமில் வைத்து அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. )உ-9)

## மரண அறிவித்தல்

### திரு. பரநிருபசிங்கம் இரட்ணராஜசிங்கம்

சரவணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திருவாளர் பரநிருபசிங்கம் (சிங்கம் ஓவசியர்) பாக்கியத்தின் அன்புப் புதல்வன் இரட்ணராஜசிங்கம் 25-6-90 அன்று அகாலமரணமானார். இவர் காலஞ்சென்ற இராஜசிங்கம் [Hatton)'சிவயோகம் (Bogawanthalawa) சிவராஜசிங்கம், ஜெகதீஸ்வரி, அருள்ராஜசிங்கம் (Umbichy Ltd. Colombo), விஜியராஜசிங்கம்] [London) சறோஜினிதேவி [Germany], மணிமேகலை வரதராஜசிங்கம் [விண்ணன்] [உரிமையாளர், ஈஸ்வரஅம்பாள் & Co., ஸ்ரான்லி வீதி-யாழ். ஈஸ்வரபகவான் & கொம்பனி ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்], தர்மகுலசிங்கம் [London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சறோஜினிதேவி [Hatton], V. E. A கனகசிவம் (Bogawanthalawa), மகேஸ்வரி, அமிர்தலிங்கம் [National Housing Development Authority Jaffna]), வாசுகி (Colombo], ஜெகசிவாமணி [London] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இவ்வறிவித்தலை உரிய நேரத்தில் அறிவிக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

தகவல் :
திருமதி பரநிருபசிங்கம் பாக்கியம்
சரவணை மேற்கு,
வேலணை.

(13491)